**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | Miscellaneous | : | |
| Preliminary Register | : | Case No. | : | **S.C.20/2022** |
| Sessions | : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 7** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| **Name :** | சின்னதுரை | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **23.01.2026**

**1, 2எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் விளாமுத்தூரில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். எங்கள் ஊரில் பச்சையம்மாள் இறந்தவிவரம் தெரியும். அவர் இறந்தஅன்று நானும் கும்பலில் போய் பார்த்தேன். வேறு வழக்கு விவரங்கள் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டேன். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. பார்வைமகசரில் உள்ள என்னுடைய கையெழுத்து அ.சா.ஆ.4. ஆஜர் எதிரிகளை எங்கள் ஊரை சார்ந்தவர்கள். போலிசார் விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

கடந்த 20.09.2021 காலை 10.15 மணியளவில் இறந்துபோன பச்சையம்மாள் வீட்டின் அருகே சென்றேன் என்றும், எங்கள் ஊரைசேர்ந்த மாமுண்டி மகன்

செல்வராஜும் அங்கு வந்தார் என்றால் சரிதான். கும்பலாக போனோம். எனக்கு எழுதபடிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் போடதெரியும். போலிசார் சம்பவஇடத்தில் தயாரித்த பார்வைமகசரை படித்து காட்டி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் தற்போது மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இல்லை.

**மறுவிசாரணை**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.